# O.S.No.22/13

வாதி / பிரதிவாதி வா.சா.1 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்ரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 04.01.2019 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

பெயர் : பெத்தாயி

த/பெ : சந்தானம்

1,2,3, 5 பிரதிவாதிகளில் தரப்பில் கு.வி.

எத்தனை சொத்துகள் முதலில் தாவாவில் தாக்கல் செய்தேன் என்று எனக்கு தெரியாது. எனது உடன்பிறந்த சகோதரர் குடும்பத்தாரர் மீதுதான் இவ்வழக்கை தாக்கல் செய்கிறேன். வேறுநபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எனது சகோதரர்கள் உயிருடன் இல்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தாய் மற்றும் தந்தை பெயரில் உள்ளது. எனது தந்தை பெயர் பேரா முத்திரையர். எனது தாய் பெயர் நாகம்மாள். எனது பெற்றோர் உயிருடன் இருந்தகாலத்தில் எங்களது திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எனது கணவருடன் வெளியூரில் குடியமர்ந்தேன் என்றால் சரிதான். சொத்துக்கள் எனது பெற்றோர் பெயரில் உள்ளதற்கு ஆவணங்கள் குறிப்பாக பட்டா போன்ற வருவாய்துறை ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர் பெயரில் உள்ள பட்டா மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே எனக்கு பாகஉரிமை உள்ளதா என்றால் ஆமாம். எனது பெற்றோருக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்தில் தான் பாகஉரிமை கோருகிறேன் என்றால் சரிதான். 6ம்பிரதிவாதி வெள்ளையம்மாள் எனது மகள். 6ம்பிரதிவாதிக்கு வாரிசுகள் 7 முதல் 10 பிரதிவாதிகள். எனது வழக்கிற்கு ஆதராவாக இருக்கும்நோக்கில் எனது மகள் 6ம்பிரதிவாதி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒருதலைபட்ச உத்தரவு அவர் மீது பிறப்பிக்கவேண்டியதாயிற்று என்றால் சரியல்ல. எனது சகோதரர் ராமசாமி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தார் என்றால் சரிதான். 1975ம் ஆண்டிலிருந்து ராமசாமி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நாங்கள் கணவர் வீட்டில் குடியமர்ந்தபிறகு சொத்துக்களை எனது பெற்றோர்கள் தான் பராமரித்துவந்தனரா என்றால் ஆமாம். ராமசாமி தனது சுயவருமானத்தில் சம்பாதித்த சொத்துக்களிலும் தவறாக பாகஉரிமை கோரும் நோக்கில் தான் எனது மகள் 6ம்பிரதிவாதி அதற்கு துணையாக வழக்கு நடத்தாமல் உள்ளார் என்றால் சரியல்ல. தாாவா 3 முதல் 5 இன சொத்துக்கள் ராமசாமி சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா 20 முதல் 22 வரையிலான சொத்துக்களும் ராமசாமியின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. 11ம்பிரதிவாதி பொன்னம்மாள் எனது சகோதரிதான். எனது சகோதரியும் எனது வழக்கிற்கு எதிராக வழக்கு நடத்தாமல் என்னுடன் கள்ளக்கூடாக உள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்கள் கூட்டுக்குடும்ப மேற்படி எத்தனை சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டது என்பதை வழக்கில் குறிப்பிட்டு தெளிவாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. இறந்த ராமசாமி

சொத்துக்களை தனிப்பட்ட சொத்துக்களை அபகரிக்கும்நோக்கில் தான் எனது மற்ற உடன்பிறப்புகள் உடன் கள்ளக்கூடாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சொத்துக்கள் மானவாரி நிலம் . மழை இல்லாத காலங்களில் நிலம் தரிசாக இருக்கும். நாளது தேதியில் நிலம் தரிசாக உள்ளது என்றால் சரிதான். குடும்பத்தில் வருவமானம் ஈட்டக்கூடிய நிலையில் எனது சகோதரர் ராமசாமி மட்டுமே அரசு பணியில் இருந்துவந்தார் என்றால் சரியல்ல. ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சுயசம்பாத்திய சொத்துக்களை அபகரிக்கும்நோக்கில் எனது மற்ற உடன்பிறப்புகள் அவர்களில் வாரிசுகளின் துணையோடு தவறான வழக்குமூலம் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.